

விழுப்புரம் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் அமைக்கப்பட்டுள்ள பேரிடர் மேலாண்மை கட்டுப்பாட்டு அறையில் தொடர் கனமழை காரணமாக வரப்பெற்ற புகார்கள் மீது எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் குறித்து வனத்துறை அமைச்சர் முனைவர் க. பொன்முடி ஆய்வு மேற்கொண்டார். மாவட்ட ஆட்சித் தலைவர் சி.பழனி, மாவட்ட வருவாய் அலுவலர் திருமதி மு.பரமேஸ்வரி, கூடுதல் ஆட்சியர் சுரதஞ் ஜெய் நாராயணா, மாவட்ட ஊராட்சி குழுத் தலைவர் ம.ஜெயச்சந்திரன் உள்ளிட்ட பலர் உடனிருந்தனர்.



வேலூர் மாவட்டம் காட்பாடி கூட்டுறவு சர்க்கரை ஆலையின் கரும்பு அரைவை கைத்தறி மற்றும் துணி நூல் துறை அமைச்சர் இராணிப்பேட்டை ஆர்.காந்தி தொடங்கி வைத்தார். அருகில் மாவட் ஆட்சியர் வே.இரா. சுப்புலட்சுமி வேலூர் மாநகர செயலாளர் ப.கார்த்திகேயன் எம்.எல்.ஏ., இராணிப்பேட்டை மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் ஜே.எல். ஈஸ்வரப்பன் எம்.எல்.ஏ., ஊராட்சி ஒன்றிய குழுத்தலைவர் வேல்முருகன், ஒன்றிய கழக செயலாளர் தணிகாசலம் மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

### தஞ்சை பெரிய கோவிலை

# ரூ. 25 கோடியில் மேம்படுத்த நடவடிக்கை!

## மாநிலங்களவையில் – சு. கல்யாண சுந்தரம் கேள்விக்கு அமைச்சர் பதில்!

புதுடெல்லி, டிச.15-

மாநிலங்களவை தி.மு.க.உறுப்பினர் எஸ்.கல்யாணசுந்தரம் அவர்கள் நாடாளுமன்றத்தில்கேள்வி நேரத்தின்போது தஞ்சாவூர் பெரிய கோவிலை யுனெஸ்கோ நிறுவனம் உலகப்பாரம்பரியக்கலாச்சாரச் சின்னங்களில்ஒன்றாகஏற்கனவே அறிவித்துள்ளது. இந்தத் திருக்கோயிலை மேம்படுத்தும் திட்டம் ஒன்றிய அரசின் சுற்றுலாத் துறையிடம் உள்ளதா? இதற்காக ஏதேனும்,நிதிஒதுக்கீடுசெய்யப்பட்டுள்ளதா எனக் கேள்வி எழுப்பினார்,

அந்தக் கேள்விக்கு ஒன்றியசுற்றுலாத்துறைஅமைச்சர் கஜேந்திர சிங் ரூ.25 கோடியில் தஞ்சை பெரிய கோயில்மேம்படுத்தப்படும் என மாநிலங்களவையில் எழுத்துமூலம் பதிலளித்துள்ளார்



அதன் விவரம் வருமாறு :

தஞ்சாவூரில் உள்ள மாபெரும் சோழர் காலப் பெரியகோயில் உள்ளிட்ட இந்தியாவின் பல்வேறு சுற்றுலாத் தலங்களும் மேம்படுத்தப்படுவதை ஒன்றிய சுற்றுலா அமைச்சகம் ஊக்கம் அளித்து வருகிறது. இதில், விளம்பரநிகழ்வுகள், மாநிலஅரசுகளின்கண்காட்சிகள் மற்றும் திரு விழாக்களை ஏற்பாடு செய்வதற்கான பங்குதாரர்கள், கண்காட்சிகள், வலைத்தளம் மற்றும்சமூகஊடகங்களில் பங்கேற்பது உள்ளிட்ட பல்வேறு முன்முயற்சிகள் மூலம் மேற்கொள்ளப்படுகின்றன.

ஒன்றிய சுற்றுலாத்துறை அமைச்சகம்தனதுஉள்நாட்டுச் சுற்றுலா அலுவலகம் மூலம் உலக சுற்றுலா தினக் கொண்டாட்டங்கள், சர்வதேச யோகா தினம், பாரம்பரிய நடைபயணங்கள் போன்ற தொடர்ச்சியான பல்வேறுநடவடிக்கைககளை ஏற்பாடு செய்கிறது. உலகப் பாரம்பரிய தளத்தின் கலாச்சார மற்றும் வரலாற்று முக்கியத்துவத்தைமுன்னிலைப் படுத்த தஞ்சாவூரில் உள்ள பெரியகோவில்தேர்வுசெய்யப்பட்டுள்ளது.

நாட்டில் சுற்றுலாவை மேம்படுத்துவதற்காக மாநிலங்கள்/யூனியன்பிரதேசங்களுடன் இணைந்து சுற்றுலாத் தலங்களின் ஒருங்கிணைந்த வளர்ச்சிக்கான வலுவான கட்டமைப்பை உருவாக்கும் நோக்கத்துடன்அமைச்சகம் தனது உள்நாட்டுச்சுற்றுலா (சுதேச தர்ஷன்) திட்டத்தைப் புதுப்பித்துள்ளது. சவால் அடிப்படையிலான இந்த இலக்கு மேம்பாட்டுத்திட்டத்தின்கீழ்ரூ. 25 கோடி செலவில் ரூ. 2.0 துணைத் திட்டத்தின் கீழ் கலாச்சாரம்மற்றும்பாரம்பரியப் பிரிவில் தஞ்சாவூர் அடையாளம் காணப்பட்டுள்ளது.இத்திட்டத்தின்கீழ் தஞ்சாவூர்பெரியகோவிலில் மேம்பாட்டுப் பணிகள் மேற்கொள்ளப்படும் என ஒன்றிய சுற்றுலாத்துறை அமைச்சர்திரு.கஜேந்திரசிங் மாநிலங்களவையில் கூறினார் என்று நாடாளுமன்ற உறுப்பினர் சு.கல்யாணசுந்தரம் தெரிவித்துள்ளார்.

### குன்னம் தொகுதி - செந்துறை பகுதியில் விடிய விடிய கொட்டித் தீர்த்த கனமழை!

## தொகுதி மக்களுடன் தூங்காமல் நின்று உதவி செய்த அமைச்சர் சா.சி.சிவசங்கர்!

அரியலூர், டிச.15-

அரியலூர் மாவட்டம் குன்னம்தொகுதிசெந்துறை பகுதிகளில் நேற்று முன்தினம் காலை முதல் இரவு வரை இரண்டு நாட்கள் விடிய விடிய கனமழை கொட்டி தீர்த்தது தகவல் அறிந்த தமிழ்நாடு அரசு போக்குவரத்துத் துறை அமைச்சர் சா.சி. சிவசங்கர் செந்துறை பகுதியில் விடிய விடிய தங்கி மழையால் பாதிக்கப்பட்டதொகுதிமக்களுடன்இணைந்துதேவையானஅனைத்துஉதவிகளையும் செய்து கொடுத்து வந்தார்.

அரியலூர்மாவட்டத்தில் வடகிழக்குபருவமழைகாரணமாக கடந்த இரண்டு நாட்களாக கனமழை பெய்து வருகிறது. முதலமைச்சர் தளபதி மு.க.ஸ்டாலின்அவர்களின் உத்திரவிற்கிணங்க முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மற்றும் மீட்பு பணிகள் குறித்து தமிழ்நாடு அரசு போக்குவரத்து துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் செந்துறையில் முகாமிட்டு முன்னெச்சரிக்கைநடவடிக்கைகள் மற்றும் மீட்பு பணிகள் உடனடியாக மேற்கொண்டார்.

அதன்படி செந்துறைஒன்றியம், முல்லையூர் காலனித் தெரு, செங்கமேடு, தளவாய் ஊராட்சி காலனி தெரு மற்றும்மதுராநகர்ஆகியஇடங்களை அமைச்சர் சா.சி.சிவசங்கர்நேரில்பார்வையிட்டு குடியிருப்புகளில் ஏற்பட்ட பாதிப்புகள், சாலை பாதிப்புகள், மின்கம்பங்கள்பாதிப்புகள், கால்நடைஉயிரிழப்புகள், விளை நிலங்கள் பாதிப்புகள் குறித்து ஆய்வு மேற்கொண்டு, பொதுமக்களிடம் குறைகளை கேட்டறிந்தார்.

மேலும், மழைபாதிப்பு ஏற்பட்ட பகுதிகளில் மீட்புப்பணிகளை விரைந்து மேற்கொள்ள அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார். மேலும் பொது மக்களின் அத்தியாவசியதேவைகளை நிறைவேற்றிடதுறைசார்ந்த அலு வலர்களுக்கு உத்தரவிட்டார்.

தொடர்ந்து, குழுமூர் மற்றும் நமங்குணம் நிவாரண முகாமில்தங்கவைக்கப்பட்டுள்ள பொதுமக்களுக்கு தேவை யான பாய், தலையணை மற்றும் போர்வைகள் உள்ளிட்ட அத்தியாவசிய பொருட்களையும் தமிழ்நாடு அரசு போக்குவரத்துத் துறை அமைச்சர் சா.சி. சிவசங்கர் வழங்கினார்.

முன்னதாக குன்னம் சட்டமன்றதொகுதிஆலத்தியூர் ராம்கோ சிமெண்ட் ஆலை அருகே உள்ள சேந்தமங்கலம் ஏரி நிரம்பி கரை உடைந்து ஊருக்குள் தண்ணீர் புகும் அபாயம் ஏற்பட்டது.இதனால்அப்பகுதியில் சிமெண்ட் ஆலைநிர்வாகம் அமைத்து இருந்த தார்சாலையை அகற்றி தண்ணீரை வெளியேற்ற வேண்டும் என்று கிராம மக்கள் கோரிக்கை விடுத்தனர். ஆனால் இதற்கு சிமெண்ட் ஆலை நிர்வாகம் உடன்படவில்லை.

இது குறித்து தகவல் அறிந்தஅமைச்சர்சா.சி. சிவசங்கர் அவர்கள் அப்பகுதிக்கு நேரடியாக சென்று பார்வையிட்டு உடனடியாக ஜேசிபி இயந்திரங்களைஉடனேவரவழைத்து தார் சாலையை அகற்றி மழைநீரை வெளியேற்றி ஏரிக்கரை உடையும் அபாயத்தில் இருந்து கிராம மக்களை காப்பாற்றினார்.

கிராம பொதுமக்கள் அனைவரும் அமைச்சர் சா.சி.சிவசங்கர் அவர்களுக்கு நன்றி தெரிவித்தனர்.

இந்த பணிகளின் போது மாவட்ட ஆட்சியர் பொ. இரத்தினசாமி, மாவட்ட வருவாய் அலுவலர் மரு. கலைவாணி, மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் சிவராமன், செந்துறைவட்டாட்சியர் வேலுமணி, செந்துறை வட்டாரவளர்ச்சிஅலுவலர் பிரபாகரன், ஒன்றிய செயலாளர் வி.எழில்மாறன், மாவட்ட பொறியாளர் அணி அமைப்பாளர் கே. சி.லூயிகதிரவன், ஊராட்சி மன்ற தலைவர் ஆறுமுகம், வருவாய்த்துறையினர் மற்றும் இதர அரசு அலுவலர்கள், கழகதோழர்கள்பலரும் உடனிருந்தனர்.

### அதிவேக தகவல் தொழில் அமைப்பை மேம்படுத்த

# 6ஜி அலைக்கற்றை தொழில்நுட்பத்தை அறிமுகப்படுத்தும் திட்டமுள்ளதா?

## மக்களவையில் டி.எம். கதிர்ஆனந்த் கேள்வி!

புதுடெல்லி, டிச.15-

நாட்டில் அதிவேக தகவல் தொடர்பு அமைப்புகளை மேம்படுத்த 6G ஸ்பெக்ட்ரம் தொழில்நுட்பத்தை அறிமுகப்படுத்த ஒன்றிய அரசிடம் ஏதாவது திட்டம் உள்ளதா என்று மக்களவையில் வேலூர் நாடாளுமன்ற தொகுதி எம்பி கதிர் ஆனந்த் கேள்வி எழுப்பினார்.

அது வருமாறு:-

நாட்டில் அதிவேக தகவல் தொடர்பு அமைப்புகளை மேம்படுத்த 6G ஸ்பெக்ட்ரம் தொழில்நுட்பத்தை அறிமுகப்படுத்த ஒன்றிய அரசு திட்டமிட்டுள்ளதா மற்றும் அப்படியானால், அதன் விவரங்கள், இல்லையெனில் அதற்கான காரணங்கள்?

ஒன்றிய அரசின் பல்வேறு துறைகளின் கீழ் உள்ள தகவல் தொடர்பு அமைப்புகளில் 6G அலைக்கற்றையை பிரத்தியேகமாக பயன்படுத்துவதற்கு ஒன்றிய அரசிடம் ஏதேனும் முன்மொழிவு உள்ளதா? அப்படியானால் அதன் விவரங்கள்; மற்றும்

நாட்டில் 6ஜி அலைக்கற்றை சேவை ஒதுக்கீடு செய்வதிலிருந்து எதிர்பார்க்கப்படும் விளைவுகள் என்ன? என்று அவர் கேள்வி எழுப்பினார்.



இதற்கு ஒன்றிய அரசின் தகவல் தொடர்பு மற்றும் ஊரக வளர்ச்சிக்கான மாநில அமைச்சர் டாக்டர் பெம்மாசானி சந்திர சேகர் எழுத்து பூர்வமாக அளித்த பதில் விவரம்.

தற்போது, 6G தொழில்நுட்பம் சர்வதேச அளவில் வளர்ச்சி நிலையில் உள்ளது மற்றும் நம் நாட்டில் இச்சேவை 2030க்குள் கிடைக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

பிரதமர் இந்தியாவின் 6G தொலைநோக்கு "பாரத் 6G விஷன்" ஆவணத்தை மார்ச் 23, 2023 அன்று வெளியிட்டார். 2030க்குள் 6G தொழில்நுட்பத்தின் வடிவமைப்பு, மேம்பாடு மற்றும் வரிசைப்படுத்துதலில் முன்னணி பங்களிப்பாளர் பாரத் 6G விஷன் கொள்கைகளை மலிவு, நிலைத்தன்மை மற்றும் எங்கும் என்று அடிப்படையாகக் கொண்டது. மேலும், தொலைத்தொடர்புத் துறையானது பாரத் 6ஜி தொலைநோக்குப் பார்வையின்படி செயல்திட்டத்தை உருவாக்க உள்நாட்டுத் தொழில்துறை, கல்வித்துறை, தேசிய ஆராய்ச்சி நிறுவனங்கள் மற்றும் தரநிலை அமைப்புகளின் கூட்டணியான 'பாரத் 6ஜி அலையன்ஸ்' அமைப்பதற்கு வசதி செய்துள்ளது.

அதிர்வெண் பட்டைகள் 44004800 MHz, 7125 8400 MHz (அல்லது அதன் பாகங்கள்), மற்றும் 14.8 15.35 GHz சர்வதேச தொலைத்தொடர்பு ஒன்றியத்தில் (ITU) சர்வதேச மொபைல் தொலைத்தொடர்புகளின் (IMT) பயன்பாட்டிற்காக ஆய்வு செய்யப்படுகிறது. இந்த ஆய்வு முடிவுகளின் அடிப்படையில், 2027 ஆம் ஆண்டு உலக வானொலி தொடர்பு மாநாட்டில் IMT பயன்பாட்டிற்கான இந்த பட்டைகளை அடையாளம் காண்பது குறித்த முடிவு எடுக்கப்படும். இந்த அலை வரிசை பட்டைகள் '6G' என்றும் அழைக்கப்படும் 'IMT2030'க்கு பரிசீலிக்கப்படும்.

தற்போது 600 மெகா ஹெர்ட்ஸ், 700 மெகா ஹெர்ட்ஸ், 800 மெகா ஹெர்ட்ஸ், 900 மெகா ஹெர்ட்ஸ், 1800 மெகா ஹெர்ட்ஸ், 2100 மெகா ஹெர்ட்ஸ், 2300 மெகா ஹெர்ட்ஸ், 2500 மெகா ஹெர்ட்ஸ், 3300 மெகா ஹெர்ட்ஸ் & 26 ஜிகா ஹெர்ட்ஸ் ஆகியவை இந்த IMT அடிப்படையிலான சேவைகளுக்காக அடையாளம் காணப்பட்டுள்ளன. ஏலத்தில் நிர்ணயிக்கப்பட்ட விலையைச் செலுத்திய பிறகு இந்தப் பேண்டுகளில் ஸ்பெக்ட்ரம் வாங்கிய TSPS ஆனது, சாதனச் சூழலின் கிடைக்கும் தன்மையின் அடிப்படையில் 2G/3G/4G/ 5G/6G உட்பட எந்தத் தொழில்நுட்பத்தையும் பயன்படுத்த முடியும்.

இவ்வாறு அமைச்சர் தனது பதிலில் கூறியுள்ளார்.



அரியலூர் மாவட்டம், குன்னம் சட்டமன்றத் தொகுதி, செந்துறை ஒன்றியத்திற்குட்பட்ட தளவாய் ஊராட்சி மதுரா நகரில் பெய்த கனமழையின் காரணமாக ஏற்பட்டுள்ள பாதிப்புகள் குறித்து போக்குவரத்துத் துறை அமைச்சர் சா.சிவசங்கர் நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார். உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் பொ.இரத்தினசாமி மற்றும் பலர் உள்ளனர்.

### வெளிநாட்டில் வசிக்கும் இந்தியர்களுக்கு பயனுள்ள வகையில்

# இந்திய சமூக நல நிதியானது பயன்படுத்தப்பட்டுள்ளதா?

## மாநிலங்களவையில் எம்.எம்.அப்துல்லா கேள்வி!



புதுடெல்லி, டிச.15-

"வெளிநாட்டில் வசிக்கும் இந்தியர்களுக்கு பயனுள்ள வகையில் இந்திய சமூக நல நிதியானதுபயன்படுத்தப்பட்டுள்ளதா? என்றும், கடந்த மூன்று ஆண்டுகளில் வளைகுடா நாடுகளில் உள்ள இந்தியதூதரகங்களைஅணுகிநிதி உதவி கோரி பாதிக்கப்பட்ட இந்திய புலம்பெயர்ந்த தொழிலாளர்களின் மொத்த எண்ணிக்கை எவ்வளவு? என்றும் தி.மு.க நாடாளுமன்ற உறுப்பினர் எம்.எம்.அப்துல்லா மாநிலங்களவையில் கேள்வி எழுப்பினார்.

அதற்குபதிலளித்த இந்திய ஒன்றிய வெளியுறவுத்துறை இணையமைச்சர் கீர்த்தி வரதன்சிங் அவர்கள் "அனைத்து இந்திய தூதரகங்களுக்கும் கிடைக்கும் இந்திய சமூக நல நிதி (ICWF) என்பதுஇன்னலில் இருக்கும் வெளிநாடு வாழ் இந்தியர்களுக்கு உதவுவதை நோக்கமாகக் கொண்ட முக்கிய நலத் திட்டங்களில் ஒன்றாகும். சம்பந்தப்பட்ட நபர்கள் குறித்த விபரங்களை முழுவதும் ஆராய்ந்த பிறகே உதவிகள் வழங்கப்படுகிறது.

இத்திட்டத்தின் திருத்தப்பட்டவழிகாட்டுதல்களின்படி தங்கும் விடுதி மற்றும்தங்கும்வசதியை வழங்குவதற்கான உதவிகளும் வழங்கப்படுகிறது. மேற்படி தகுதியுள்ள நபர்கள் என அறியப்பட்ட பிறகு விமானப் போக்குவரத்துஉதவி, சிறுகுற்றங்கள்செய்தஅல்லதுதங்கள் முதலாளியால் பொய்யாகக் குற்றம் சாட்டப்பட்டு சிறையில் அடைக்கப்பட்ட இந்தியர்களுக்கு சட்ட உதவி, தங்கள் வாழ்க்கைத் துணையால் கைவிடப்பட்ட/ஏமாற்றப்பட்ட/துஷ்பிரயோகம் செய்யப்பட்ட இந்தியப் பெண்களுக்கு உதவி போன்றவை அடங்கும்.

மேலும் இறந்த இந்தியர்களின்சடலங்களைவெளிநாட்டிலிருந்து இந்தியாவுக்குக் கொண்டு வருவதற்கும் அல்லதுஇறந்தவரின்உடலைஅங்கேயே தகனம் அல்லது அடக்கம் செய்வதற்கு நிதி உதவி வழங்குவது, தீவிரமான உயிருக்கு ஆபத்தான காயங்களுடன்மருத்துவமனையில்அனுமதிக்கப்பட்ட வெளிநாடு வாழ் இந்தியர்களின் அவசர மருத்துவ பராமரிப்புச் செலவுக்கு உதவுவது போன்றவையும் அடங்கும்.

கடந்த மூன்று ஆண்டுகளில்அரபுநாடுகளில்வசிக்கும் இந்தியர்கள் மொத்தம் 31371 பேர் நிதி உதவி கேட்டு தூதரகத்தை அணுகியுள்ளனர். அதன்படி மொத்தம் 57 கோடியே 08 இலட்சத்து 44 ஆயிரத்து 154 ருபாய் நிதியுதவிவழங்கப்பட்டுள்ளது.

மேலும் 17 பேருக்கு சட்ட உதவிகள் வழங்கப்பட்டதால்மூலம்இத்திட்டத்தின் கீழ் 8 இலட்சத்து 21 ஆயிரத்து 679 ரூபாய் செலவிடப்பட்டுள்ளது" என்று தெரிவித்துள்ளார்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### காட்டூர் கோபால்
### டிசம்பர் 15 (1978)



தொழிலாளர் முன்னேற்றச் சங்கப் பேரவைப் பொதுச்செயலாளர், கழக சட்டமன்ற மேலவை உறுப்பினர் உள்ளிட்ட பொறுப்புகளை ஏற்றுப் பணியாற்றியவர்.

தொழிலாளர்களின் நலன் காக்கும் பொருட்டு 'உழைப்பாளி' என்ற இதழைத் துவக்கி, அதன் ஆசிரியராகவும் பெரும் பணி ஆற்றினார்.

"இயக்கத்தோடு இணைந்து வளர்ந்த பகுத்தறிவுச் சிங்கம்! ஆயிரம் கொடுமைகள் இழைக்கப்பட்ட போதும் ஆடாது அசையாது இலட்சியம் காத்திட்ட பெருமகன்! நெருக்கடி காலத்தில் மிசாக் கைதியாக இருந்தபோது அவருக்கு கிடைத்த பரிசு நெஞ்சு வலி. அதுவே அவரை நம்மிடமிருந்து பறித்துக் கொண்டுவிட்டது. தொழிலாளர்களுக்காக வாதாடுகிற திறனும் – போராடுகிற துணிவும் நிறைந்த எனதருமை உடன்பிறப்பு" என தலைவர் கலைஞரால் புகழப்பட்டவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.